# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>காஸ் நிரப்பும் நிலையத்திற்கு மின் இணைப்பு வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய உதவி செயற்பொறியாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை</u>

புகார்தாரர் திரு.ரவிக்குமார், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னையில் வசித்து வருகிறார். புகார்தாரர் மடிப்பாக்கம் பகுதியில் புதிதாக எல்.பி.ஜி.காஸ் நிரப்பும் நிலையத்திற்கு 23 கேவி திறன் கொண்ட மின் இணைப்பு பெற மடிப்பாக்கம் மின் வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.நடராஜன், உதவி செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மின் வாரிய அலுவலகம், மடிப்பாக்கம், சென்னை அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை 19.01.2013ம் தேதி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.நடராஜன், உதவி செயற்பொறியாளர், அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.10,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது செங்கல்பட்டு முதன்மை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 25.04.2025 அன்று திரு.நடராஜன், முன்னாள் உதவி செயற்பொறியாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணை மற்றும் ரூ.20,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.